செய்தி வெளியீடு எண் : 2140 நாள் : 26.10.2023

**சென்னை கிண்டியில் உள்ள ரமதா பிளாஸா ஹோட்டல் வளாகத்தில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தளவாடங்கள் மேலாண்மை துறையில் உள்ள 30 தொழில் நிறுவனங்களுடன், மாணவர்களின் பல்வேறு திறன்களை மேம்படுத்தும் திறன் தகுதி தொகுப்பிற்கு (Qualification Pack) ஒப்புதல் பெறுவதற்கான கலந்தாய்வு கூட்டம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ.இன்னசென்ட்திவ்யா இ.ஆ.ப அவர்களின் தலைமையில் இன்று (26.10.2023) நடைபெற்றது.**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், மாநிலத்தில் திறன் பயிற்சி பெற்ற மனித வளத்தை அதிகரித்து, தொழிற்சாலைகளின் திறன் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) திறன் பயிற்சிகளை மேற்கொள்வதற்கான ஒருங்கிணைப்பு (Nodal) முகமையாக அறிவிக்கப்பட்டு, மாநிலத்தில் திறன் மேம்பாட்டை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் தனது இணையதளத்தின் மூலம் மாநிலத்தில் உள்ள பல்வேறு அரசுத் துறைகளால் நடத்தப்படும் அனைத்துத் திறன் பயிற்சிகளையும் ஒருங்கிணைக்கிறது. திறன் பயிற்சித் திட்டங்களைத் தரப்படுத்துவது, மாவட்ட வாரியாக அரசு மற்றும் தனியார் பயிற்சி நிறுவனங்களை அடையாளம் காண்பது, மதிப்பீடு மற்றும் சான்றிதழ் வழங்குவது ஆகியவற்றில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் கவனம் செலுத்துகின்றது.

மேலும் சமீபத்தில் ஒன்றிய அரசின் திறன் மேம்பாட்டுத் துறையால் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ஒரு சான்றிதழ் அளிக்கும் நிறுவனமாகவும் திறன் மதிப்பீடு செய்யும் நிறுவனமாகவும் அங்கீகரிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் தொழில் துறைக்கு தேவையான புதிய திறன் பயிற்சி பாடங்களை வடிவமைப்பதை முன்னெடுத்துள்ளது.

தளவாடங்கள் மேலாண்மை துறையானது நம் நாட்டில் வளர்ந்து வரும் துறையாக உருமாறியுள்ளது. இத்துறையை சார்ந்த பல்வேறு பிரிவுகளில் திறன் பயிற்சி பெற்ற நபர்கள் தேவைப்படுகின்றனர். தளவாடங்களை கையாளும் இத்துறையில் திறன் இடைவெளியை நிரப்பும் வகையில் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு வேலை வாய்ப்புகள் அதிக அளவில் ஏற்பட்டுள்ளதால் தமிழ்நாடு அரசு தனி கவனம் செலுத்தி மாணவர்கள் தளவாடங்கள் துறையில் திறனை மேம்படுத்துவதற்கு ஏதுவாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பல்வேறு திறன் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் தளவாடங்கள் மேம்பாட்டுத் துறையின் நவீனக்கால வேலைவாய்ப்புகளுக்கு ஏற்ப தகுதி தொகுப்பை (Qualification pack) உருவாக்கியுள்ளது. இதில் செயற்கை நுண்ணறிவு, தளவாடங்களை கையாளும் செயல்முறைகள் போன்ற பல்வேறு திறன்கள் அடங்கும்.

இவை போன்ற பாடத்திட்டங்களின் மூலம் தளவாடங்கள் மேலாண்மை துறையில் வேலைவாய்ப்புக்கான பலதரப்பட்ட பணிகளை மேற்கொள்வதற்கான திறன்களை மேம்படுத்தலாம்.

இந்த தகுதி தொகுப்பை மேம்படுத்துவதற்காக தளவாடங்கள் மேலாண்மை துறையில் உள்ள பல்வேறு தொழில் நிறுவனங்களுடனான திறன் தகுதி தொகுப்பிற்கு ஒப்புதல் பெறுவதற்கான கலந்தாய்வு கூட்டம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் அவர்கள் தலைமையில் தளவாடங்கள் மேலாண்மை துறையை சார்ந்த 30 முன்னணி நிறுவனங்களுடன் நடைபெற்றது. இத்தகைய திறன் பயிற்சி பெறும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் சிறந்த வேலை வாய்ப்புகளை பெறுவது உறுதியாகும்.

இக்கூட்டத்தில் நான் முதல்வன் திட்ட முதன்மை செயல் அலுவலர் திரு.எம்.ஜெயபிரகாசன் அவர்கள் தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம், போக்குவரத்து மற்றும் தளவாடங்கள் துறை மேலாண்மை இயக்குநர் திரு.கிரிதரன் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் திட்ட இயக்குநர் திரு.க.வை.ராஜ்குமார் மற்றும் தளவாடங்கள் நிறுவனங்களின் உயர் அலுவலர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in